**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**முகாமைத்துவ கற்கைகள் பீடம்**
**மனிதவள முகாமைத்துவ உயர்தர சான்றிதழ்**
**HRC2406 - மனிதவள முகாமைத்துவத்துக்கான திறன்கள்**
**இறுதி பரீட்சை- 2025**
**காலம் - மூன்று (03) மணித்தியாலங்கள்**

007

---

**திகதி: 31/08/2025** **நேரம்: மு.ப 9.30 - பி.ப 12.30**

---

**அறிவுறுத்தல்கள்:**

- **வினாத்தாள் 100 மதிப்பெண்களை கொண்ட கட்டுரை வினாக்களை கொண்டது.**
- **06 வினாக்களில் ஏதேனும் 05 வினாக்களுக்கு பதில் அளிக்கவும்.**
- **ஒவ்வொரு வினாவும் 20 மதிப்பெண்களை கொண்டது**
- **பதில்களை வழங்கப்பட்ட விடை புத்தகத்தில் எழுதவும்**
- **தெளிவற்ற கையெழுத்து குறைவான மதிப்பெண்ணுக்கு வழிவகுக்கும்**

---

வினா 01

"உணர்ச்சி நுண்ணறிவு (Emotional Intelligence) என்பது உங்களை மற்றும் பிறரை சிறந்த முறையில் புரிந்து கொள்ள உதவும் சமூக மற்றும் உணர்ச்சி திறன்களின் (Emotional Skills) தொகுப்பாகும் "

மேலே தரப்பட்ட கூற்றுடன் நீங்கள் உடன்படுகிறீர்களா? ஒரு நிறுவனத்தில் வேலை செய்யும் போது உணர்ச்சி நுண்ணறிவின் முக்கியத்துவத்தை விளக்குக

(20 மதிப்பெண்கள்)

வினா 02

இந்த நவீன, மற்றும் மாறிக்கொண்டிருக்கும் உலகில், எதிர்கால மனித வள முகாமையாளருக்கு மிகவும் முக்கியமான மென்திறன்கள் (soft skills) யாதாக இருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? ஐந்து நவீன மென்திறன்களை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கவும்.

(20 மதிப்பெண்கள்)

வினா 03

" தொழில்சார் நெறிமுறையானது (work ethics) மனித வள நிபுணர்களின் செயல்திறன்மிக்க தொழிற்பாட்டுக்கு முக்கியமானது. ஏனெனில் நெறிமுறை தரநிலையானது (ethical standards) அறம் சார்ந்த பொறுப்பு மட்டுமல்லாமல், அது தனிநபர் மற்றும் நிறுவனங்களுடைய வெற்றிக்கு தந்திரோபாயமிக்க முக்கிய அம்சமாகும்".

மேலே தரப்பட்ட கூற்றுடன் நீங்கள் உடன்படுகிறீர்களா? நீங்கள் ஏன் உடன்படுகிறீர்கள் அல்லது உடன்படவில்லை என்பதை காரணங்கள் மற்றும் எடுத்துக்காட்டுகளுடன் விளக்குங்கள் .

(20 மதிப்பெண்கள்)

வினா 04

"குழு உறுப்பினராகும்போது குழுவோடு இணைந்து வேலை செய்வது ஆளிடை தொடர்பு திறனின் (Interpersonal Skills) பிரதான பகுதியாகும். தலைமைத்துவ திறனானது மனித வள நிபுணர்களுக்கான முக்கியமான திறனாகும்."

மேலே தரப்பட்ட கூற்றை மனிதவளம் சார்ந்த எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்கவும்.

(20 மதிப்பெண்கள்)

வினா 05

"வேலைச் சூழலில் வெற்றிக்கு செயல்திறன்மிக்க தொடர்பாடல் முக்கிய திறனாகும்".

a) வேலைச் சூழலில் தொடர்பாடல் திறனின் முக்கியத்துவத்தை விளக்குங்கள். (08 மதிப்பெண்கள்)

b) பொருத்தமான எடுத்துக்காட்டுகளை வழங்கி எழுத்து, வாய்மொழி மற்றும் வாய்மொழிசாரா தொடர்பாடலும், கேட்டல் திறனும் (listening skills) எவ்வாறு நிறுவனத்தில் செயற்திறனோடு பயன்படுத்தப்படலாம் என்பதை விளக்குக.

(12 மதிப்பெண்கள்)

வினா 06

ஒரு மென்பொருள் நிறுவனத்தில் திட்ட முகாமையாளராக பணியாற்றும் ரவி, ஒரே நேரத்தில் அதிக முன்னுரிமை கொடுக்க வேண்டிய பல திட்டங்களை கையாள்கிறார். சமீபத்தில், அவர் அதிக சுமையடைந்ததாக உணர்வதோடு, மனஅழுத்தம், காலக்கெடுவை தவறவிடுதல், மற்றும் சோர்வின் அறிகுறிகளை வெளிப்படுத்துகிறார்.

இந்த நிலைமையை அடிப்படையாகக் கொண்டு, அவரது மனஅழுத்தத்தை செயல்திறன்மிக்கமுறையில் கையாள உதவக்கூடிய உத்திகளை விளக்கவும்.

(20 மதிப்பெண்கள்)

(20 மதிப்பெண்கள் * 05 வினாக்கள் = மொத்தம் 100 மதிப்பெண்கள்)

-முழு பதிப்புரிமை பெற்றது-

-